விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 11 செவ்வாய்க்கிழமை (25.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 157


# நாடு முழுவதும் ஜூன் 7 வரை பயணத் தடை நீடிப்பு

## இன்று, 31 மற்றும் ஜூன் 4ஆம் திகதிகளில் மட்டும் தளர்வு




- பயணத் தடையை தளர்த்தினாலும் பொதுப் போக்குவரத்து சேவைகள் இடம்பெறாது.
- ஜூன் 7ஆம் திகதிவரை மதுக்கடைகள் பூட்டு.
- பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்போது நடந்து செல்லக்கூடிய அருகில் உள்ள கடைக்கு ஒருவர் மட்டும் செல்ல அனுமதி.

நாடு முழுவதும் ஜூன் 7ஆம் திகதிவரை பயணத்தடை நீடிக்கப் பட்டுள்ளதோடு இன்றும் 31ஆம் திகதியும் ஜூன் 4ஆம் திகதியும் பயணக் கட்டுப்பாடு தளர்த்தப் படும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகளை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா வெளிப்படுத்தியிருக்கின்றார்.

பின்வரும் நடைமுறைகளே பின் பற்றப்படவேண்டும்.

01. வாகனங்களில் செல்லாது நடந்து செல்லக்கூடிய தூரத்தில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கே செல்ல 15

### வவுனியா நெடுங்கேணியில்
## மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணி அரியாமடுப் பகுதியில் அமைந்துள்ள குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட் 15

## கொரோனாத் தொற்றால் வடக்கில் மூவர் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

கொரோனாத் தொற்றால் வட மாகாணத்தில் மூவர் உயிரிழந் துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரும் வவுனியாவைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

யாழ்.சாவகச்சேரி - மீசாலை பகுதியைச் சேர்ந்த 68 வயதான முதியவர் ஒருவரே உயிரிழந்துள்ளார். 15

## நாட்டை முடக்குவதால் பயனில்லை நிலைமை கைமீறிச் சென்றுவிட்டது
### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

நாட்டில் பயணத் தடை அல்லது முடக்கம் ஊடாக கொரோனா தொற்றுப் பரவலை கட்டுப்படுத்த முடியாது என கூறியிருக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், சரியான நேரத்தில் சிகிச்சை வழங்க தவறியமையே அதிகரித்த இறப்புக்க 15

### கைதடி கிழக்குப் பகுதியில்
## கிணற்றுக்குள் தவறிவிழுந்த 17 வயது மாணவி உயிரிழப்பு



(சாவகச்சேரி)

கைதடி கிழக்குப் பகுதியில் கிணற்றுக்குள் தவறிவிழுந்த 17 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தென்மராட்சி - கைதடி 15



### குருபீடாதிபதி பிரம்மஸ்ரீ
## மகேஸ்வரக் குருக்கள் இறைபதமடைந்தார்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியும் நயினை நாகபூசணி அம்மன் ஆலய சிவாச்சாரி 15

## இலங்கையில் கட்டுமீறிப்போன கொரோனா வைரஸ் தொற்று
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

இலங்கையில் கட்டுமீறிப் போன கொரோனாவைக் கட்டுப் படுத்த வேண்டுமெனில் அது மக்களின் நடவடிக்கைகளில்தான் தங்கியுள்ளது என இராணுவத் தளபதியும் கொரோனாக் கட்டுப் பாட்டுச் செயலணியின் தலைவருமான ஜென 15

### தென்மராட்சி - பாலாவியில்
## உழவு இயந்திரம் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு
### கள்ள மணல் ஏற்றியதாக தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி - பாலாவி அம்மன் கோவிலடிப் பகுதியில் நேற்று 15

### குறிகாட்டுவானில்
## மின்சாரம் தாக்கியதில் கடற்படை சிப்பாய் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு 15

## மன்னாரில் உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு!

(மன்னார்)

மன்னார் தாழ்வுப்பாடு பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடற்கரையில் கரையொதுங்கிய சடலம் மிக நீண்டகாலத்துக்கு முன்னர் உயிரிழந்த ஒருவருடையதாக 15

# கடந்த 38 நாட்களில் 606 கொரோனா மரணம்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு பின்னரான 38 நாட்களில் நாட்டில் 606 கோவிட் மரணங்கள் ஏற்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏப்ரல் 15 ஆம் திகதி மொத்த கோவிட் மரணங்கள் 604 ஆக காணப்பட்டதுடன் மே மாதம் 23 ஆம் திகதி முடிவடையும் போது மரணங்களின் எண்ணிக்கை ஆயிரத்து 210 ஆக உயர்ந்துள்ளது.

மே மாத ஆரம்பத்தில் நாட்டின் கோவிட் மரணங்களின் எண்ணிக்கை 678 ஆக காணப்பட்டதுடன் மே மாதத்தில் கடந்த 23 நாட்களில் மாத்திரம் கோவிட் காரணமாக 523 பேர் மரணித்துள்ளனர் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-03)


Tamils Help Line

தமிழர் உதவிச் சேவை வழங்கும்

பயிற்சி உங்கள் வசதிக்கேற்ப இரு நாட்களில் நடைபெறும்.

இலங்கை மக்களுக்கான

**கொரோனா தற்காப்பு யோகா பயிற்சி**

கொடிய கொரனாவின் தீவிரத்தில் இருந்து உங்களை தற்காத்துக் கொள்ளுங்கள்!

சமூக இடைவெளி | முகக் கவசம் | தனிமைப் படுத்தல் அரச சுகாதார நடைமுறைகளை பின்பற்றல் | அத்துடன்

இவ்விசேட யோகா பயிற்சியையும் பயின்று உங்களை தற்காத்துக் கொள்ளுங்கள்!

ONLY 20 MINUTES YOGA

கொரோனா தாக்கத்தின் பேரவலத்தை எதிர்நோக்கி இருக்கும் இலங்கை மக்கள் அதிலிருந்து தம்மை தற்காத்துக்கொள்ளவென யோகா நிபுணரால் விசேடமாக உருவாக்கப்பட்ட இந்த 20 நிமிட யோகா பயிற்சியின்மூலம் உங்கள் Oxygen மற்றும் நோயெதிர்ப்பு தன்மையை அதிகரித்து உங்களை தற்காத்துக் கொள்ளுங்கள்.



இலங்கை நேரம்

**26 & 27 May 2021 at 7:00 PM**

Zoom ID: 869 8455 1106 & Passcode: 052021

பயிற்சியாளர் /Trainer

மருத்துவர். கௌரிபாலன் Dr. Gowribalan

ஹத யோகா பயிற்சியாளர் UK Hatha yoga Teacher

Tamils Help Line | www.tamilshelpline.org | +44 203 5001573 | +44 7525 050010 | contact@tamilshelpline.org


முழுநேர பயணத் தடையின்போது

# நாவற்குழியில் இரு ஆலயங்கள் உடைத்து கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முழுநேர பயணத் தடை அமுலில் உள்ள நிலையில் நாவற்குழி - கோவிலாக்கண்டி பகுதியில் அடுத்தடுத்து இரு ஆலயங்கள் உடைக்கப்பட்டு பெருமளவு பணம் மற்றும் பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளது.

கோவிலாக்கண்டி நாச்சிமார் கோவில் மற்றும் அதன் அருகில் உள்ள பிள்ளையார் கோவில் ஆகியவற்றிலேயே இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றிருக்கின்றது.

ஆலயத்தின் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதியான பொருட்கள், உண்டியல் பணம் உள்ளிட்ட சுமார் 4 இலட்சம் பெறுமதியான பொருட்கள் மற்றும் பணத்தை திருடிச் சென்றுள்ளதாக கூறப்படுகின்றது.

இரண்டு நாட்களுக்கு முன் இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-03)

நாட்டில் கொரோனாத் தொற்றால்

# 41 வயதுக்கு குறைவான 51 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் வைரஸ் தொற்றால் 41 வயதுக்கும் குறைவான 51 பேர் இதுவரை பலியாகியுள்ளனர் என்று கோவிட் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி 9 வயதுக்கிடைப்பட்ட இருவரும் 10 - 30 வயதுகளுக்கிடைப்பட்ட 15 பேரும் 31 - 40 வயதுகளுக்கிடைப்பட்ட 34 பேரும் கோவிட் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், 41 - 50 வயதுகளுக்கிடைப்பட்ட 87 பேரும் 51 - 60 வயதுகளுக்கிடைப்பட்ட 171 பேரும் 61 - 70 வயதுகளுக்கிடைப்பட்ட 321 பேரும் 71 வயதுக்கும் மேற்பட்ட 567 பேரும் இதுவரை பலியாகியுள்ளனர். (ம-03)

## சாவு அறிவித்தல்



திருமதி **சண்முகம் இரத்தினம்** (நாகேஸ்வரி)

(ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

பிறந்தது : 31.10.1932

மறைந்தது : 22.05.2021

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் இரத்தினம் (நாகேஸ்வரி) கடந்த 22.05.2021 (சனிக்கிழமை) அன்று இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதடியார் - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அருமை மருமகளும் புங்குடுதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகத்தின் (முன்னாள் பிரதம எழுதுவினைஞர் - கச்சேரி, மன்னார்) அன்பு மனைவியும் குணேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான படிகலிங்கம், நீலகண்டன் ஆகியோரின் மூத்த சகோதரியும் காலஞ்சென்ற திவ்யபவானி மற்றும் வசந்தகுமார் (லண்டன்), நளினி (அவுஸ்திரேலியா), வசந்தி (அவுஸ்திரேலியா), சாந்தி (அவுஸ்திரேலியா), துஷ்யந்தி (மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் - வ.மா.) ஆகியோரின் அருமைத் தாயாரும் காலஞ்சென்ற சிவமோகன் மற்றும் கமலா (இங்கிலாந்து), விமலேஸ்வரன் (அவுஸ்திரேலியா), கணேசன் (அவுஸ்திரேலியா), உதயன் (அவுஸ்திரேலியா), வைத்திய கலாநிதி குமரவேள் (மாகாண சுகாதாரத் திணைக்களம் - வ.மா.) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவநயனி - சர்வேஸ்வரா, சிவசங்கரி - கௌரிசங்கர், ரெபேக்கா, கஜன், கார்த்திக், நிவேதா, ஸ்ரீலக்ஷ்மி - அஸ்வின், சாய்பாரதி, விஜய், நிலானி, எழினி, வேனினி, வேணிலா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் குகப்பிரணவி, மாயா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சாயி பஜனை நிகழ்வின் பின்னர் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் நேற்று முன்தினம் (23.05.2021) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது.

இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள், உரித்துடையோர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

32/2, விதானையார் வீதி,
சுண்டிக்குளி.

(C-2129)

தகவல்:-
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தின் கணக்குக் கிளையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றும்

அமரர்

**தர்ஷியா சுஜீவன்**

அவர்கள் கடந்த 23.05.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறையடி சேர்ந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்
யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## கண்ணீர் அஞ்சலி



தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமா யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய இணைப்பாளர் **திரு. நடேசு தயாளன்** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**இந்துமதி நடேசு**

அவர்கள் கடந்த 20.05.2021 (வியாழக்கிழமை) அன்று இறைபதம் எய்தியமையையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

யாழ்ப்பாணப் பிராந்திய கல்வி டிப்ளோமா நெறியின் ஒப்புபெற்ற இணைப்பாளரும் விரிவுரையாளர்களும்

## இலங்கையில் அதிகரிக்கும் தொற்று

# மூன்று நாட்கள் பயணத் தடையால் எந்தவித பிரயோசனமும் இல்லை

## ஹொங்கொங் பல்கலைக்கழகம் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் அதிகரித்துச் செல்லும் கொரோனா தொற்றை கட்டுப்படுத்த குறுகிய கால பயண கட்டுப்பாடுகள் மூலம் தீர்வு கிடைக்காது என ஹொங்கொங் பல்கலைக்கழக பேராசிரியர் மலிக் பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

எனவே 14 நாட்கள் போக்குவரத்து கட்டுப்பாடுகளுக்கான விஞ்ஞான ரீதியிலான அவசியத்தை அவர் தெளிவுபடுத்தியுள்ளார். நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளதால் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டுப்பாடுகள் மூலம் கொரோனா வைரஸினை கட்டுப்படுத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் நடுப்பகுதியில் இந்த கட்டுப்பாடுகளை விதித்திருந்தால் அவற்றால் பயன் ஏற்பட்டிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

மூன்று நாட்கள் போக்குவரத்து தடையின் பின்னரும் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட ஒருவர் அதனை பரப்ப முடியும். ஒருவர் கொரோனாவினால் தொற்றுக்குள்ளாகி நோய் அறிகுறிகள் வெளிப்படுவதற்கு ஐந்து நாட்கள் எடுக்கலாம் என தெரிவித்துள்ள பேராசிரியர் கொரோனாவினால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனது வீட்டில் உள்ள ஒருவருக்கு தொற்றை பரப்பினால் வீட்டில் உள்ளவர்கள் அறிகுறிகளை வெளிப்படுத்துவதற்கு ஐந்து நாட்கள் எடுக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அவர்களை இரண்டு வாரங்களுக்கு தனிமைப்படுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மூன்று நாட்கள் முடக்கல் என்பது கொரோனா வைரஸினை கட்டுப்படுத்துவதில் எந்தப் பயனையும் ஏற்படுத்தாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ( நி-4)

# ‘எக்ஸாம் ஸ்ரீலங்கா’ புதிய செயலி அறிமுகம்

(கொழும்பு)

அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் டிஜிற்றல் கொள்கைக்கு அமைய ‘எக்ஸாம் ஸ்ரீலங்கா’ என்ற பெயரிலான தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் செயலியை பயன்படுத்தி வீட்டில் இருந்தவாறே கைத்தொலைபேசி மூலம் பரீட்சைகள் திணைக்களத்தின் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்கும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இந்த செயலியை அறிமுகம் செய்யும் நிகழ்வில் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

சான்றிதழ்களை உறுதிப்படுத்துதல், பெறுபேறுகளை உறுதிப்படுத்தல் உட்பட பல்வேறு சேவைகளையும் இந்த செயலியின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு மக்களுக்கு கிடைத்துள்ளது என அவர்மேலும்தெரிவித்தார்.(நி-4)

## இலங்கை உள்ளிட்ட 5 நாடுகளுக்கு தடை

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட ஐந்து நாடுகளைச் சேர்ந்த பயணிகளின் வருகையை பஹ்ரைன் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதாக அந் நாட்டு அரச செய்திநிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த பயணிகளின் நுழைவை பஹ்ரைன் மே 24ஆம் திகதிமுதல் நிறுத்தி வைத்துள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

# எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயம் பூட்டப்பட்டது

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது.

இந்நிலையில் கொழும்பு மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தையிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் காரியாலயம் மூடப்பட்டுள்ளது.

அந்தக் காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தின் பணியாள் தொகுதியினர் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய தனிமைப்படுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் அத்துல் கோட்டையில் இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான காரியாலயத்தின் செயற்பாடுகள் மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இங்கிலாந்து அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன?

## சரத் வீரசேகர கேள்வி

(கொழும்பு)

மே-18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டி லண்டனில் இடம்பெற்ற நிகழ்வில் புலிகளின் ஆதரவாளர்கள் புலிக்கொடிகளை ஏந்தி, ஈழ கீதத்தை இசைத்துள்ளனர்.

இத்தகையோருக்கு எதிராக இங்கிலாந்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? என இலங்கை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேள்வி எழுப்பியுள்ளார்.



புலிகள் இயக்கம் இங்கிலாந்தில் தடை செய்யப்பட்ட அமைப்பாக உள்ளது. பொது மக்களை நினைவுகூருவது என்ற போர்வையில் இவ்வாறான ஒரு பயங்கரவாத அமைப்பின் சின்னங்களை காட்சிப்படுத்த எப்படி அனுமதிக்கலாம்? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

லண்டனில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் நேற்று தனது டுவிட்டரில் வெளியிட்டு சரத் வீரசேகர இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். (நி-4)

# பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பம்; அதிபரின் சான்றிதழ்கள் தேவையில்லை

(கொழும்பு)

பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக பல்கலை. அனுமதிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் கோரும் பாடசாலையிலிருந்து எந்த ஆவணங்களையும் சமர்ப்பிக்கத் தேவையில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.



நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதனைத் தெரிவித்தார்.

விண்ணப்பதாரர்கள் தேவையான ஆவணங்களை மட்டும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் பாடசாலை அதிபரின் சான்றிதழ்கள் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்தார். அத்தோடு விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள கிராமஉத்தியோகத்தரின் சான்றிதழ்களை தனியார் விண்ணப்பதாரர்கள் பெற வேண்டிய அவசியமில்லை என்றும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.

பயணக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு பாடசாலை கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமானதும் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார். விண்ணப்பங்களை சமர்ப்பிக்க காலக்கெடு ஜூன் 11 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதாகவும் ஒன்லைனில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (நி-4)

# லா லிகா கால்பந்து போட்டி அத்லெடிகோ மாட்ரிட் அணி சம்பியன்

லா லிகா கால்பந்து போட்டியில் அத்லெடிகோ மாட்ரிட் அணி 11 ஆவது முறையாக சம்பியன் கோப்பையை உச்சி முகர்ந்தது.

ஸ்பெயினில் புகழ்பெற்ற லா லிகா கிளப் கால்பந்து தொடரில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்றன. இந்த சீசனுக்கான போட்டி நேற்று முன் தினம் நிறைவடைந்தது. இதில் பட்டம் வெல்வதில் அத்லெடிகோ மாட்ரிட் மற்றும் நடப்பு சம்பியன் ரியல் மாட்ரிட் அணிகள் இடையே கடும் போட்டி நிலவியது.

கடந்த சனிக்கிழமை இரவு அத்லெடிகோ மாட்ரிட் அணி தனது கடைசி லீக்கில் ரியல் வல்லாடோலிட் அணியை எதிர் கொண்டது.

18 ஆவது நிமிடத்தில் பின்கள வீரர்களை ஏமாற்றி வல்லாடோலிட் வீரர் ஆஸ்கர் பிளானோ முதலாவது கோல் அடித்தார். அதன் பிறகும் அந்த அணி மேலும் சில ஷாட்டுகளை உதைத்த போதிலும் அத்லெடிகோ கோல் கீப்பர் ஜன் ஒப்லாக் அவர்களின் முயற்சிகளை முறியடித்தார்.

விறுவிறுப்பான ஆட்டத்தின் முடிவில் அத்லெடிகோ மாட்ரிட் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வல்லாடோலிட்டை தோற்கடித்தது. இதன்மூலம் அத்லெடிகோ மாட்ரிட் அணி26 வெற்றி, 8 சமநிலை, 4 தோல்வி என்று 86 புள்ளிகளுடன் பட்டியலில் முதலிடத்தை பிடித்து கிண்ணத்தைத் தட்டிச் சென்றது. (8-4)




# ஆசிய கிண்ணத் தொடர் 2023 இற்கு ஒத்திவைப்பு

ஆசியக்கண்டத்தில் உள்ள அணிகளுக்கு இடையில் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் நடத்தப்படும். உலகக் கோப்பையை கருத்தில் இருத்தி அதற்கு ஏற்றபடி இருபது-20 அல்லது ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடத்தப்படும்.

இந்த வருடம் இருபது-20 தொடர் நடத்தப்பட வேண்டும். கொரோனாத் தொற்று காரணமாக ஆசிய அணிகளான இந்தியா, பாகிஸ்தான், இலங்கை அணிகள் கடந்த ஆண்டு போதுமான அளவிற்கு




கிரிக்கெட் விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் இந்த வருடம் அதிகமான போட்டிகளில் விளையாட முடிவு செய்துள்ளன. மேலும் கொரோனாத் தொற்றால் அடிக்கடி போட்டி அட்டவணையை மாற்றக் கூடிய நிலையும் ஏற்படுகிறது.

ஆகவே, ஆசிய கிண்ண போட்டிக்கான அட்டவணையை தயார் செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக 2021 ஆம் ஆண்டுக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர்2023 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(8-4)

# இலங்கையை 33 ஓட்டங்களால் வென்றது பங்களாதேஷ் அணி

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி 33 ஓட்டங்களால் நேற்று முன்தினம் வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பங்களாதேஷ் அணி சார்பில் முஷ்பிகூர் ரஹீம் 84 ஓட்டங் களைப் பெற்றதுடன் தமீம் இக்பால் (52 ஓட்டங்கள்) மற்றும் மஹமதுல்லா ரியாத் (54 ஓட்டங்கள்) ஆகியோர் அரைச் சதம் பெற்றனர்.

பந்துவீச்சில் தனஞ்சய டி சில்வா 2 விக்கெட்டுகளையும் லக்ஷான் சந்தகேன், தனுஷ்க குணதிலக்க மற்றும் துஷ்மந்த சமீர ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந் நிலையில் 258 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இலங்கை அணி 48.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பில் வனிந்து ஹசரங்க 74 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். (8-4)

# ஐ.பி.எல்.எஞ்சிய ஆட்டங்கள் ஐக்கிய அரபு எமிரேட்சில்



14 ஆவது ஐ.பிஎல். 20 ஓவர் போட்டி இந்தியாவில் கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி தொடங்கியது. ஐ.பிஎல். போட்டி 29 ஆட்டங்கள் முடிந்த நிலையில் பாதியில் நிறுத்தப்பட்டது. இன்னும் 31 ஆட்டங்கள் நடத்தப்பட வேண்டியுள்ளது.

எஞ்சிய ஐ.பிஎல். ஆட்டங்களை 20 ஓவர் உலக கோப்பை போட்டிக்கு முன்பு நடத்திட வேண்டும் என்பதில் கிரிக்கெட் வாரியம் தீவிரமாகவுள்ளது. உலக கோப்பை போட்டி ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளது. இதனால் ஐ.பிஎல். எஞ்சிய ஆட்டங்களை செப்டெம்பரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த போட்டியை ஐக்கிய அரபு எமிரேட்சில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இங்கிலாந்து, இலங்கை நாடுகளும் ஐ.பிஎல். எஞ்சிய ஆட்டங்களை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளன.

ஐ.பி.எல். எஞ்சிய ஆட்டங்களை செப்டெம்பர் 15 ஆம் திகதி ஐக்கிய அரபு எமிரேட்சில் தொடங்க கிரிக்கெட் வாரியம் இறுதி முடிவை எடுத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஒக்டோபர் 15 ஆம் திகதி வரை ஒரு மாத காலத்திற்கு ஐ.பிஎல். எஞ்சிய ஆட்டங்கள் அனைத்தும் நடத்த கிரிக்கெட் வாரியம் திட்டமிட்டுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதிநடைபெறும் இந்திய கிரிக்கெட் வாரியம் சிறப்பு பொதுக்குழுவில் இது குறித்து இறுதிமுடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படும். (8-4)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




ஆ.முல்லைதிவ்யன்
வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் வடக்கு மாகாண கல்வி. பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சும் இணைந்து அண்மையில் நடத்திய பண்பாட்டு பெருவிழாவிலே "வடமாகாண இளங்கலைஞர் விருது" பெற்ற கவிஞர், எழுத்தாளர் ஆ.முல்லைதிவ்யனை வாழ்த்துகின்றோம்.
கரவை கலை நண்பர்கள் (6823)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**அமரர்.சின்னத்தம்பி கிருஷ்ணமூர்த்தி**
(ராசு)



(ஓய்வுபெற்ற சாரதி, பிரதேச சபை,கரவெட்டி)

எமது குடும்பத்தலைவர்
அமரர்.சின்னத்தம்பி
கிருஷ்ணமூர்த்தி
இறைபதமடைந்தது முதல் இன்று வரை பல்வேறு வழிகளிலும் தம் துயரினைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் சிரம் தாழ்த்தி, கரங்கூப்பி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக 25.05.2021 இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறும் அந்தியேட்டி நிகழ்வுக்கு தங்களை அழைக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

பாடசாலை வீதி,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(C 2187)

குடும்பத்தினர்.

# 10வது ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு
27 . 06 . 1983



உதிர்வு
16 . 05 . 2011

**அமரர். இரத்தினம் இதயராசா**

(திதி:-25.05.2021 பூர்வபக்க சதுர்த்தசி)

ஆண்டு வட்டம் பத்திழுந்தோம்
மீண்டு வருவாயோ வித்தகனே
ஈன்றவளும் எண்ணியழ – உன் முன்
தோன்றியவர் விம்மியழ வீம்பெதற்கு எண்ணுகிறாய்
விரைந்து எங்கள் விழிமுன் வாடா
ஏங்குதடா இன்னுமெங்கள் இதயவறை தேடுதடா
நாண்டு நின்ற நேசமுகம் வேண்டுமென்று நாடுதடா
பாங்குடைய சின்னவனே தேங்குதிங்கே வெள்ளமடா
தாங்க விடை தேடும் எங்கள் தாழ்ந்தமனம் விம்முதடா

(C-2179)

மானாவளவு, கரணவாய்,
கரவெட்டி.

என்றென்றும் உன் நினைவால் வாடும்
உன் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திரு.சுப்பையா சிவபாதலிங்கம் (ராசா)



பிறப்பு: 02.07.1952
இறப்பு: 16.05.2021

திருநெல்வேலி கம்பஸ் லேனைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பையா சிவபாதலிங்கம் (16/05/2021) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா -கனகம்மா தம்பதியினரின் அன்பு புதல்வனும், சுந்தரலிங்கம், சிவனேஸ்வரி, சர்வேஸ்வரி (லண்டன்), கணேசலிங்கம் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற ராஜேஸ்வரி, வாகீஸ்வரன் மற்றும் ரூபன் (லண்டன்), ஜெயா (இத்தாலி) ஆகியோரின் மைத்துனரும், உதயகாந்தன் (கனடா), கோகுலன் (கனடா) சிவனியா (லண்டன்), தரணியா (ஆசிரியை), அகலியா, கிருசியன் (லண்டன்), கௌதமன் (லண்டன்), கிருசன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், புஸ்பரேகா (கனடா), சுவர்ணரேகா (கனடா), சாந்தன் ஆகியோரின் சித்தப்பாவும், உமேஷன் (கனடா), காருணியா (கனடா), கபிரியா (கனடா), பிருத்திகா (கனடா), ஆராதனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 25/05/2021 இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் ஜேர்மனியில் இறுதிக் கிரியைகள் யாவும் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(6919)

தகவல்:
சு.சுந்தரலிங்கம்
077 931 9434

# மரண அறிவித்தல்

## திரு.நல்லையா மகேஸ்வரன் (துரைமணி)

பிறப்பு
15 . 01 . 1954



இறப்பு
22 . 05 . 2021

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா மகேஸ்வரன் (துரைமணி) அவர்கள் கடந்த 22.05.2021 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மற்றும் திரவியம் தம்பதியரின் பாசமிகு புதல்வனும், உதயகுமாரியின் அன்புக் கணவரும், உதயேஸ்வரன், உதயதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மேஸ்வரனின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.05.2021 இன்று செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈஞ்சடி வைரவர் கோவிலடி,
சுதுமலை வடக்கு.

(C-2186)

தகவல்:
குடும்பத்தினர்.

# புற்றுநோயை கண்டறியும் நிலையம் ஏழு நாட்களும் திறந்திருக்கும்

(நல்லூர்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் உள்ள புற்று நோயை முன்கூட்டியே கண்டறியும் நிலையம் வாரத்தின் 7 நாட்களும் காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை திறந்திருக்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம் புற்றுநோயை குணப்படுத்த முடியும்.

புற்றுநோய் என்பது உயிரணுக்களின் கட்டுப்பாடற்ற பெருக்கமாகும்.

புற்றுநோயை அதன் ஆரம்ப நிலைமையில் கண்டறிவதன் மூலம் அல்லது புற்று நோய்க்கு முன்னைய நிலையில் கண்டறிவதன் மூலம் அதனை முற்றாக குணப்படுத்த முடியும்.

எனவே, நாம் செய்ய வேண்டியது ஒன்றுதான். இது பற்றி அதிக சிரத்தையுடன் செயற்படுவதுதான்.

அவதானமாகவும் கரிசனையாகவும் இருப்பதன் மூலம் நாம் புற்றுநோய்யை வெல்ல முடியும்.

021 222 2640 என்ற தொலைபேசிக்கு அழைப்பெடுத்து உங்களுக்கான நியமனங்களை பதிந்து கொள்ளலாம் என யாழ்.புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் நிலையம் அறிவித்துள்ளது. (5-4-33)

# மணிவிழா கொண்டாட்டம் தற்போதைக்கு இல்லை

## கலாநிதி ஆறு.திருமுருகன்

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவிஆலயத்தலைவரும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் எதிர்வரும் 28 ஆம் திகதிவெள்ளிக்கிழமை 60 ஆவது வயதில் பிறந்த நாள் மணி விழா காண் கின்றார்.

தற்போது நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்று அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்போதைக்கு மணிவிழாக் கொண்டாட்டங்கள் எதுவும் இல்லை என கலாநிதி ஆறு. திருமுருகன் அறிவித்துள்ளார். அமைதியான நல்ல சூழல் திரும்பிய பின்னரே இது தொடர்பில் முடிவெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (5-4-18)

# இந்துக்குருமாரின் நலனில் அக்கறையுள்ள செயல் வீரர்

## ஆறு.திருமுருகன் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

சிவாச்சாரியத் தலைமகன் பிரம்மஸ்ரீசமகேஸ்வரக்குருக்களின் பிரிவு சைவ சமூகத்துக்கு மிகுந்தகவலை தரும் செய்தியாகும் என அகில இலங்கை இந்துமா மன்ற உப தலைவர் ஆறு.திருமுருகன் தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய இரங்கல் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தின் பிரதம குருக்களாகவும் நயினை நாக பூஷணி அம்மன் ஆலய குருவாகவும் இந்துக்குருமார்களின் பீடாதிபதியாகவும் அரிய பணியாற்றிய மூத்த சிவாச்சாரியத் தலைமகனின் பிரிவு குறித்து அகில இலங்கை இந்துமா மன்றத்தின் சார்பில் மிகுந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதாகமத்தில் நல்லறிவும் ஆங்கிலப்புலமையும் மிக்க குருக்கள் இந்துக் குருமார் ஒன்றியத்தை அமைப்பதிலும் செயற்படுத்துவதிலும் அரிய பணியாற்றியவர். பல முக்கியத்துவம்வாய்ந்த சமயம் தொடர்பான கூட்டங்களில் கலந்து கொண்டு துணிந்து கருத்துக்களை வெளியிட்டவர்.

இந்துக் குருமாரின் நலன்களைப் பாதுகாப்பதில் என்றும் அக்கறையோடு செயற்பட்ட செயல் வீரர். அன்னாரின் ஆத்மா அம்பாளின் திருவடியில் ஆறுதல் பெறப் பிரார்த்தித்து அமைகிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (5-4)

# ஆங்கில மொழி அறிவை மேம்படுத்த போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

கொவிட் விடுமுறைக் காலத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கி வரும் STEPS-NP நிறுவனத்தினால் கொவிட் விடுமுறைக் காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு ஆங்கில மொழி அறிவினை மேம்படுத்தும் முகமாக அவர்களுடைய பாடசாலை தரம் மற்றும் பாடத்திட்டத்திற்கு ஏற்ற வகையில் தனிநபர் போட்டி நிகழ்ச்சிகள் நிகழ்நிலை (online)மூலமாக ஒழுங்கமைக்கப்படவுள்ளன.

தனிப்பேச்சு, தனிப்பாடல், கட்டுரை வரைதல், சுவரொட்டி வரைதல், புதினப் பத்திரிகை தயாரித்தல் போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்கள் தங்களது முழுப்பெயர், பாடசாலை, தரம், முகவரி, பங்கு பற்றும் போட்டிகள், Viber or Whatsapp இலக்கம் என்பவற்றினை (Stepsmoe@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 077 558 1626 எனும் Viber/Whatsapp இலக்கத்திற்கு எதிர்வரும் 15.06.2021 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு STEPS-NP நிறுவன இணைப்பாளர் அறிவித்துள்ளார். (5-4)

# தடைப்பட்டுள்ள பரிசோதனைகள்; தேங்கியுள்ள மாதிரிகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வந்த பிசிஆர். சோதனைகள் நேற்று முன் தினம் முதல் தடைப்பட்டுள்ளன.

பிசிஆர். சோதனைக்குரிய உபகரணங்கள் மற்றும் இரசாயனங்கள் இல்லாமையால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கடந்த மாத இறுதியில் இருந்து பிசிஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

அதற்குரிய உபகரணங்கள் , இயந்திரங்கள் என்பவை கிடைக்கப் பெறுவதில் சிக்கல் நிலைமை காணப்பட்டது. எக்ஸ்ரக்ஸன் ரீஜென்ட்ஸ் O எனப்படும் இரசாயனப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் யாழ்ப் பாணம் போதனா வைத்திய சாலை யிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் மூன்று நாளைக்கு சமூக மட்டத்திலான பிசிஆர். மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சமூக மட்டத்திலான பிசிஆர். சோதனைகள் மேற்கொள்ளாமல் அவசர தேவை கருதி சில சோதனைகளை மட்டும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதேவேளை 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிசி. ஆர். மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்படாது தேங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4)



வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் குணதிலகவின் வழிகாட்டலின் கீழ் சமூக பாதுகாப்பு பொலிஸார், வலிமேற்கு பிரதேச சபை உறுப்பினர் கந்தையா இலங்கேஸ்வரன் மற்றும் ஜடாயு தன்னார்வ அமைப்பினர் இணைந்து, நேற்று முன்தினம் வலிமேற்கு பகுதி முழுவதும் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (படம்-கஜிந்தன்)

# யாழ்.மாநகரப் பகுதியில் குப்பை சேகரிப்பு மையங்கள்

(குப்பிழான்)

யாழ்.மாநகர சபையின் திண்மக் கழிவகற்றலை விருத்தி செய்யும் நோக்குடன் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனின் பணிப்புரையில் மாநகர சபைக்கு உட்பட்ட ஒன்பது திரட்டு மையங்களை குப்பை சேகரிப்பு மையங்களாக மாற்றித் தரம் பிரித்துப் போடும் கழிவுத் தொட்டிகளை வைக்கும் பணிகள் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றன.

இதேவேளை, நேற்று முன் முதல் மக்கள் குப்பைகளைத் தரம் பிரித்துக் கொண்டு சென்று மேற்படி கழிவுத் தொட்டிகளில் இடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(5-4-18)



சுழிபுரம் மேற்குப் பாரதிகலைமன்றத்தின் 39 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டுக் கலைமன்ற செயற்குழுவின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை சுழிபுரம் மேற்குப் பாரதி முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது.பயணக்கட்டுப்பாட்டிற்கு மத்தியிலும் மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(படம்:- ரவிஷாந் )



**நல்லூர் ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் திவ்யஜீவன் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)**

# ஆட்டோ சேதம்

(கரணவாய்)

அல்வாய் கிழக்கு பகுதியில் மதுபோதையில் இருந்த சிலரால் ஆட்டோ ஒன்று சேதமாக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் அல்வாய் கிழக்கு பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது. வெதுப்பக பொருளை விற்பனை செய்யும் ஒருவரின் ஆட்டோவே சேதமாக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.(5-4-60)

# சீன வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் இரத்து

(கொழும்பு)

சீன வெளிவிவகார அமைச்சர் வோங் ஹீயின் இலங்கை விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூன் மாதம் முதல் வாரத்தில் எதிர்பார்க்கப்பட்ட குறித்த விஜயமானது தற்போது இரத்து செய்யப்பட்டுள்ளதை பிராந்திய ஒத்துழைப்புகளுக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உறுதிப்படுத்தினார். (நி-4)

# பாராளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் சுய தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களான அசோக அபேசிங்க, லக்ஸ்மன் கிரியெல்ல, ஹர்ஷ டி சில்வா மற்றும் துஷார இந்துனில் ஆகியோர் தனிமைப்படுத்திக்கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதனையடுத்து அவருடன் நெருங்கிய தொடர்பிலிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சுய தனிமைப்படுத்தலைக் கடைப்பிடிக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்தல் விடுத்திருந்தது.

இந்நிலையிலேயே இவர்கள் தம்மை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளனர். (நி-4)

# அத்தியாவசிய சேவை பற்றி அறிய 1965 இற்கு அழைக்கவும்

(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளின் போது செயற்படும் அத்தியாவசிய சேவைகள் குறித்து பொதுமக்கள் தகவல்களை அறிந்துகொள்ள விசேட தொடர்பு இலக்க சேவையை (Hotline) அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

பொதுமக்கள் தங்கள் விசாரணைகளுக்காக 1965 என்ற உதவிச் சேவை எண்ணை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். கட்டணமில்லா 24 மணி நேர இந்த உதவிச் சேவை நேற்று முதல் செயற்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடி காரணமாக இலங்கையில் பயணக் கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதன்போது அத்தியாவசிய சேவைகள் மட்டுமே செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பிணவறைகளிலும் பற்றாக்குறை ஏற்படலாம்

## விசேட மருத்துவ நிபுணர் அஜித் தென்னக்கோன்



(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் கொரோனாவால் இறக்கும் நபர்களின் உடல்கள் குவியும் நிலைமை ஏற்படக் கூடும் என கொழும்பு பிரதான சட்ட வைத்திய அதிகாரி விசேட மருத்துவ நிபுணர் அஜித் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய கொரோனா நிலவரம் தொடர்பில் விளக்கிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பேசிய அவர்,

கொரோனாவால் இறக்கும் நபர்களின் உடல்கள் குவியும் நிலைமை தற்போது ஏற்படவில்லை என்றாலும் எதிர்வரும் நாட்களில் அந்த நிலைமை ஏற்படக் கூடும் என்று தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் கொரோனா தொற்றாளர்கள் வீடுகளில் இறப்பது அதிகரிக்கலாம் எனவும் மரணங்களின் மரண விசாரணை அறிக்கை கிடைக்கும் வரை அவற்றை பிணவறையில் வைக்க வேண்டும் என்பதால், குளிரூட்டப்பட்ட கொள்கலன் பெட்டிகள் சில ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் வீடுகள் மற்றும் மருத்துவ மனையில் ஏற்படும் மரணங்கள் தொடர்பான பரிசோதனை அறிக்கைகள் கிடைக்கும் வரை உடல்களை பிணவறைகளில் வைக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதனால், இடவசதிகள் தொடர்பான பிரச்சினை ஏற்படக் கூடும் எனவும் அஜித் தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார். (நி-4)


# கண்ணீர் அஞ்சலி



## பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதியும் கதுமலை அம்மன் தேவஸ்தான பிரதம குருவுமாகிய **பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்** அவர்கள் இறைபதம் எய்திய செய்தியறிந்து துயரடைகிறோம்.

அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா நித்திய பேரின்பமடைய எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்பாளின் திருவடிகளை வணங்குகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

(ஏ)

வலம்புரி நிர்வாகம்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 1955 – 11 – 23



இறப்பு 2021 – 04 – 25

அமரர். திருமதி. **புஸ்பராசா கமலேஸ்வரி**

சோகங்கள் அனைத்தையும் மென்று விழுங்கி
ஒரு புன்சிரிப்பை மட்டும் பரிசளித்தாயே- அம்மா
கள்ளங்கபடமற்ற உன் சிரிப்பும் நல்லோர் உள்ளங்களை
உபசரிக்கும் உன் பண்பும் இனி எங்கு காண்போம்
துன்பங்கள் பறந்தோடி இன்புற்று நாம் வாழ
காலங்கனிந்த வேளையிலே காலன் உமை
கவர்ந்தானோ? தனித்து நின்று தவிக்கின்றோம்
எமைக்காண வாராயோ அம்மா...
சொந்தம் நூறு இருந்தாலும் அம்மா
உன் அன்புக்கு ஈடாகுமா...?

ஸ்ரான்லி கல்லூரி வீதி,
சுன்னாகம் கிழக்கு, யாழ்ப்பாணம்.

(6922)

குடும்பத்தினர்

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

சந்தைகள், இறைச்சிக் கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான இடைக்கால மீள் கேள்வி அறிவித்தல் திகதி மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல்-2021

அரசினால் வெளியிடப்பட்ட EST-6/03/LEA/3381 இலக்க, 18.05.2021 ஆம் திகதிய விசேட விடுமுறை தின சுற்றறிக்கைக்கமைவாக, சபையினால் கீழ்க் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக் கடைகளினை 2021 ஆம் ஆண்டின் குறிக்கப்பட்ட காலத்திற்கு (01.06.2021 - 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விதிறத்தல் திகதியானது **28.05.2021 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 02.00** என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை பகிரங்கமாக அறியத் தருகின்றேன்.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
**2021.05.22.**

(C-2185)

# மன்னாரில் இரு தினங்களில் 23 கொரோனாத் தொற்றாளர்கள்

## சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் 23 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மன்னாரில் அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான கொரோனா இடை நிலை சிகிச்சை நிலையத்தில் தற்போது வரை 80 தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

மன்னாரில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் கிடைக்கப்பெற்ற பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 23 நபர்களுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர்களுடன் சேர்த்து இந்த மாதம் 82 கொரோனாத் தொற்றாளர்களும் தற்போது வரை மொத்தமாக 442 நபர்களும் இந்த வருடம் மாத்திரம் 425 நபர்களும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் தற்போது வரை 2 ஆயிரத்து 72 பி.சி.ஆர்.பரி சோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இவற்றில் 412 பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகள் எதிர்பார்க்கப்பட்டு ள்ளன.

இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை பயணக்கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்படாமல் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் அரசினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மக்கள் தேவை இன்றி வீடுகளில் இருந்து வெளியில் வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அவ்வாறு அதியாவசிய தேவைகளுக்காக வீடுகளில் இருந்து வரும் போது வீட்டில் இருந்து ஒருவர் மாத்திரமே வெளியில் வருமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (8-4-285)

# மன்னார் பொலிஸாருக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி

(மன்னார்)

நாடளாவிய ரீதியில் பயணத்தடை முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும் சுகாதார நிலைமைகளைக்கருத்தில் கொண்டு மன்னார் பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பொலிஸாருக்கு இரண்டாம் கட்ட தடுப்புசி ஏற்றும் நடவடிக்கை நேற்றுக் காலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஒழுங்கமைப்பில் கடந்த மாதம் முதலாவது தடுப்புசியை பெற்றுக்கொண்ட 51 பொலிஸாருக்கு நேற்றைய தினம் இரண்டாவது கட்ட தடுப்புசி வழங்கப்ட்டுள்ளது. கொரோனா பரவல் அதிகளவு பரவி வருகின்ற நிலையில் தடுப்புசி செலுத்தும் நடவடிக்கையும் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-4-285)

## பாடல் வெளியீடு

(மன்னார்)

பெண்கள் உரிமை மற்றும் மனித அடிப்படை உரிமைகளை வெளிக்கொணரும் முகமாக மன்னார் இளைஞர்களால் உருவாக்கப்பட்ட "எழுந்திடு" விழிப்புணர்வு பாடல் நேற்றைய தினம் வைவவ ரீதியாக யூரியூப் தளத்தில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

குறும்படம் ஒன்றினை மையப்படுத்தி தயாரிக்கப்பட்ட குறித்த பாடலின் ஒலி மற்றும் ஒளி வடிவம் இறுவெட்டாக விரைவில் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத்தது.(8-4-285)

# வவுனியா பிரதேச சபை தவிசாளருக்கு தொற்றுறுதி

(நெளுக்குளம்)

வவுனியா வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் ச.தணிகாசலத்திற்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் வவுனியா வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் ஊழியர்களிற்கு எழுமாறான வகையில் அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப் பட்டிருந்தது.

அன்றையதினம் தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர் சமுகமளிக்கவில்லை.

மறுநாள் வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குச் சென்ற அவர் அன்டிஜன் பரிசோதனையினை முன்னெடுத்திருந்தார்.

இதன்போது அவருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (8-4-299)

# அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் மின் குமிழ்கள் ஒளிர்வதில்லை

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரத்தின் பல இடங்களில் மின் குமிழ்கள் ஒளிர்வதில்லை என கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் திருமதி.இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. முல்லைத்தீவு நகரத்தின் மின் குமிழ்களை ஒளிர வைக்க வேண்டிய பொறுப்பு பிரதேச சபையிடம் காணப்படுகின்றது.

நாமும் பிரதேச சபை அமர்வுகளில் ஒளிராத மின் குமிழ்களை ஒளிரச் செய்யுங்கள். இருள் சூழ்ந்த பகுதிகளில் புதிதாக மின் குமிழ்களை ஒளிரச் செய்யுங்கள் எனக் கோரிக்கை விடுத்தாலும் அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுவதில்லை.

வட்டுவாகல் பாலத்திற்கு மின் குமிழ்கள் பொருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பிரதேச சபையில் விடுக்கப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்ததுடன் பிரதேச சபையில் நிதி இல்லை என்ற காரணங்களைத் தொடர்ச்சியாகக் கூறிக்கொண்டு இருக்க முடியாது என அவர் தெரிவித்தார். (8-4-350)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் இந்து மயானம் அமைப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் இந்த வருடத்திற்கான வேலைத்திட்டத்தில் ஒன்றாக மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் ஒதுக்கப்பட்ட 0.7 மில்லியன் ரூபாய்க்கு இயக்கச்சி கருக்கருவியன் தாழ்வு இந்து மயானம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச மக்கள் பிரதேச சபையிடம் விடுத்த தொடர்ச்சியான வேண்டுகோளினை தொடர்ந்து குறித்த பிரதேச இந்து மயானம் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு செய்யப்படுகின்றது.

இப்புனரமைப்புப் பணிகளை பச்சிலைப்பள்ளி தவிசாளர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். (8-4-350)

# வவுனியா ஆடைத்தொழிற்சாலையின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(குருமன்காடு)

வவுனியா ஆடைத்தொழிற்சாலையின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு அவசர கடிதம் மூலம் தெரியப்படுத்தி ஆடைத் தொழிற்சாலையில் ஏற்படும் கொரோனாத் தொற்று பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைக்க நடவடிக்கை எடுப்பேன் என வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியாமாவட்ட கொரோனா நிலைமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்திலும் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப் பட்டுள்ளனர்.

இதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் மாவட்ட மட்டக் கூட்டத்தில் பல முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

இருந்தாலும் சுகாதாரப் பிரிவினருக்கு ஒத்துழைப்பாக பொலிஸாரோ அல்லது ஏனைய அரச உத்தியோகத்தர்களோ துணை போவது குறைவாக இருக்கிறது.

எனவே அனைவரும் இணைந்தால் தான் கொரோனாவால் பாதுகாக்க முடியும்.

ஆடைத்தொழிற்சாலையை மூடுவதற்கு நிறைய சட்ட திட்டங்கள் உள்ளன. குறைந்த பட்சம் அங்கு வேலை செய்பவர்கள் அதிக இடைவெளிகளைப் பேண வேண்டும்.

ஆனாலும் நீங்கள் சொல்வதை என்ன கேட்பது என்ற நிலையில் தான் அவர்களது செயற்பாடும் உள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு அவசர கடிதம் மூலம் தெரியப்படுத்தி இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப் புள்ளியை வைக்க உள்ளேன்.

அத்துடன் சுகாதார பணிமனைக்கு நிறைய தேவைகள் உள்ளன.

அதனைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுப்பேன் என அவர் தெரிவித்தார். (8-4-250)

# இராசிபலன்

**25.05.2021**
**வைகாசி 11, செவ்வாய்க்கிழமை**
**சதுர்த்தசி முன்னிரவு 7.59 மணிவரை**
**சுவாதி காலை 5.53 மணிவரை**
**விசாகம் பின்னிரவு 4.15 மணிவரை**
**சுபநேரம் 10.22 - 11.52 மணிவரை**
**இராகுகாலம் 2.52 - 4.22 மணிவரை**
**சந்திராஷ்டமம்:- அச்சுவினி**
**வைகாசி விசாகம்.** வைாவள்


மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், ஆரோக்கியமான நாள்.


மிதுனம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.


கடகம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் புதிய சிந்தனைகள் உருவாகும், பெற்றோர் மீதான பாசம் கூடும், சுபகாரியப் பேச்சுக்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


சிம்மம்


சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.


கன்னி

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


துலாம்

தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், மனதில் இனம்புரியாத மனச்சஞ்சலங்கள் தோன்றி மறையும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


தனுசு

தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.


மகரம்

தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.


கும்பம்

தொலைபேசி வழித்தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர் நண்பர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.


மீனம்

எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், குடும்பத்தில் சிறுசிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**அறிவைப் பெருக்குபவன் துயரத்தைப் பெருக்குவான்.**

# 14 நாட்கள் நாட்டை முழுமையாக முடக்குங்கள்

## ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

**(கொழும்பு)**

**14 நாட்களுக்கு நாட்டை முற்றாக முடக்குமாறு கோரி கொரோனாக் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

ஏற்கனவே 14 நாட்கள் முழுமையான சமூக முடக்கலை அல்லது முழு ஊரடங்கை அமுல்படுத்துமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் (SLMA), வைத்திய நிபுணர்கள் சங்கம் (AMS) உள்ளிட்ட 4 முக்கிய மருத்துவ சங்கங்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.



இந்நிலையில் நாட்டை முடக்குவது குறித்து ஆராய விசேட கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் எஸ். முனசிங்க தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

எனினும் நாட்டை முழுமையாக முடக்குவது குறித்து இப்போது என்னால் எதுவும் கூற முடியாது எனவும் அவர் கூறியுள்ளார். (நி-4)

# ஜூன் மாதத்திற்குள் சடுதியாக தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிக்கும்

## சுகாதார தரப்பு கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் ஜூன்மாதத்திற்குள் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் சடுதியாக அதிகரிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறு ஏற்படும் சடுதியான அதிகரிப்பை சுகாதார தரப்பினால் தாங்கிக்கொள்ள முடியாது என அந்தச் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் செனால் பெர்னாண்டோ தெரிவித்தார். இதனால் எதிர்வரும் இரு வாரங்களுக்கு நாடு தழுவிய ரீதியில் முழுமையான பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)

# தொற்றாளர்களாக அனுமதிக்கப்படுபவர்களுக்கு போசாக்கான உணவுகளை வழங்குங்கள்

## பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றவர்கள் வசதி குறைந்தவர்களோ அல்லது சாப்பிட வழியில்லாதவர்களோ அல்ல.

ஆகவே போசாக்கு மிக்க உணவுகளை அவர்களுக்கு வழங்க வேண்டியது அவசியமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்றுவரும் பெரியகல்லாறு பகுதியிலுள்ள வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை விஜயம் மேற்கொண்ட இரா. சாணக்கியன், நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்ற உணவின் தரம் குறித்து ஆராய்ந்த பின்னர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் கொரோனாத் தொற்று காரணமாகவே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்களே தவிர எந்த வகையிலும் வசதி குறைந்தவர்களோ அல்லது சாப்பிட வழியில்லாதவர்களோ அல்ல என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே போசாக்கு மிக்க உணவுகளை வழங்க வேண்டியது உணவு வழங்குபவர்களின் முக்கிய கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.(நி-4)

# மீள முடியாத கட்டத்தில் நாடு கொழும்பு வைத்தியசாலை எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் காரணமாக மீளமுடியாத இருண்ட காலகட்டத்தில் இலங்கை இருப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இருதயவியல் வைத்தியர் எச்சரித்துள்ளார். நாட்டைத் தொடர்ந்து 14 நாட்கள் முழுமையாக முடக்காவிட்டால் கடும் ஆபத்து ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி-4)




# அதிபுத்திசாலி மன்னரும் அப்பிராணி அமைச்சரும்

"உலகிலேயே தலை சிறந்த மன்னனான என்னை இந்த நாட்டில் வணங்காதவர்களும் இருக்கின்றனர்." "தங்களை எதிர்த்துப் பேசுவதற்கு மன்னிக்க வேண்டும்.

தங்களை வணங்காதவர்கள் நம் நாட்டில் இருக்கவே முடியாது மன்னா" என்றார் அப்பிராணியார்.

எதிர்த்துப் பேசியதற்கு என்ன தண்டனை தரப் போகிறாரோ என்ற அச்சத்தில் அவருடைய உடல் நடுங்கியது.

"அப்படியா வாருங்கள் என்னோடு" என்று சொன்ன மன்னர், விறுவிறுவென்று அரண்மனைத் தோட்டம் நோக்கிச் சென்றார்.

வேறு வழியில்லாததால் முக்கிய அமைச்சரான அப்பிராணியாரும் ஏனைய அமைச்சர்களும் அவர் பின்னே சென்றனர்.

மன்னர் குய்யோமுறையோ அப்பிராணியாரைப் பார்த்து, "பார்த்தீர்களா அமைச்சரே, இந்தத் தோட்டத்தில் நான் வந்து நின்று சில நொடிகள் ஆகியும் அந்த மரம் என்னை வணங்கவில்லை, இந்தச் செடி கொடிகள் என்னை வணங்கவில்லை.

அதோ மேலே தெரிகிறதே வானம் அதுகூட என்னை வணங்கவில்லை, இவ்வளவு ஏன் அதோ தூரத்தில் தெரி




வணங்குகிறோம். இயற்கையைத்தான் மனிதர்கள் வணங்க வேண்டுமே தவிர, இயற்கை மனிதர்களை வணங்க வேண்டிய அவசியம் இல்லை" என்று தன்னை அறியாமல் பேசிவிட்டார் அப்பிராணியார்.

என்ன நடக்கப் போகிறதோ என்று ஏனைய அமைச்சர்கள் பயந்தனர். மன்னர் கோபத்துடன், "யாரிடம் பேசுகிறீர்கள் என்று தங்களுக்கு மறந்துவிட்டதோ?" என்று கேட்டார்.

"மன்னா, அவை எல்லாம் எப்படி வணங்கும்? நீங்களே சொல்லுங்கள்?"

(தொடரும்)

# மகாபாரதம்



சிறந்த வீரர்கள் அங்கு செல்ல உன் கடமையைச் செய். இது தர்ம யுத்தம் என்பதை நினைவில் கொள். இங்கு நீ தயக்கம் காட்டினால் புகழை இழப்பாய். அத்துடன் மட்டுமன்றி அது உனக்கு பழியும் தரும்.

இரக்கத்தால் நீ போராடவில்லை என பகைவர்கள் எண்ண மாட்டார்கள். போரிட அஞ்சுகிறாய் என சிறுமைப்படுத்துவர்.

உனக்கு அந்த இழுக்கு வரலாமா? இதை விடப் பெருந்துன்பம் எதுவுமில்லை. வென்றால் இந்த மண்ணுலகம், வீர மரணம் அடைந்தால் விண்ணுலகம். இதனை மறக்காது துணிந்து போர் செய்.

வெற்றி, தோல்வி பற்றியோ இன்ப, துன்பம் பற்றியோ, இலாப நஷ்டம் பற்றியோ கருதாமல் ஊக்கத்துடன் போர் செய். பழி, பாவம் உன்னைச் சாராது. புகழும், புண்ணியமும் உனக்குக் கிடைக்கும்" என கண்ணன் தமது உரையை முடித்தார்.

கண்ணனின் அறிவுரை கேட்டதும் பார்த்தனின் மனக்குழப்பம் தீர்ந்தது. அவன் கண்ணனை வணங்கி "அந்தோ என் மயக்கம் ஒழிந்தது. என் சந்தேகங்கள் தீர்ந்தன. இனி உன் சொல்படி நடப்பேன்" எனக் கூறி போரிடத் தயாரானான்.

(தொடரும்)

**கீதையின் போதனை**

போரிடமாட்டேன் என்ற அருச்சுனனை மாற்றுவதற்காக எடுத்தாளப்பட்ட ஐந்து வாதங்கள் மனிதர்கள் அனைவருக்கும் கண்ணனால் கூறப்பட்ட போதனைகள். இந்து சமய நம்பிக்கையுடையவர்களுக்குச் சொல்லப்படுகிறது.

பற்றுகளை அறு. அதற்காக புலனடக்கம் என்ற யோக சாதனையைச் செய்துகொண்டே இரு.

பலனில் பற்றற்று சுய தருமத்தை ஒழுகு.

ஈசனை மறக்காதே. அந்த இரண்டற்ற பரம்பொருளிடம் சுயநலமற்ற பக்தியைச் செலுத்து.

அம்மெய்ப் பொருளையே புகலிடமாகக் கொள்.

யாரையும் எதையும் வெறுக்காமலிருக்கும் சமநோக்கு அல்லது பிரும்ம உணர்வு என்னும் முடிவை நோக்கிச் செல்

# நாட்டை முற்றாக முடக்கினால் நாளாந்தம் 15 பில்லியன் ரூபாய் நட்டம்

(கொழும்பு)

**நாட்டை முற்றாக முடக்கினால் அதன் மூலம் நாளாந்தம் 15 பில்லியன் ரூபாய் நட்டம் ஏற்படுவதாக இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**

கொவிட்-19 வைரஸ் வேலைகளுக்கு மத்தியில் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைவதற்கு இடமளிக்கமுடியாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் யுத்த தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள பாரிய அளவிலான நிதி தேவைப்பட்டது.

அதேபோன்று தற்சமயம் கொவிட் வைரஸ் பரவும் இந்த சந்தர்ப்பத்திலும் சுகாதார உபகரணங்களைக் கொள்வனவு செய்யவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பாரியளவிலான நிதி அரசாங்கத்திற்கு அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.



நாட்டின் சனத்தொகையில் 60 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் அன்றாடம் வருமானம் ஈட்டுபவர்கள் ஆவர். நாட்டை முற்றாக முடக்குவதன் மூலம் இவர்களின் வருமானம் முழுமையாக தடைப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு துறைமுக நகர வேலைத்திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு வருடாந்தம் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதன் மூலம் ஒவ்வொரு வருடமும் 4 இலட்சம் பேர் நாட்டின் தொழில் படையில் இணைந்து கொள்வார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். துறைமுக நகர சட்டமூலத்தின் ஊடாக அரசாங்கத்தின் பொருளாதார இலக்கை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். (நி-4)

## பி.சி.ஆர், அன்டிஜன் பரிசோதனைகள்

# வழிகாட்டல்களை பின்பற்றாத தனியார் வைத்தியசாலைகளுக்கான அனுமதி ரத்து செய்யப்படும்

(கொழும்பு)

பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை முன்னெடுக்கும் தனியார் வைத்தியசாலைகளுக்கு சுகாதார அமைச்சினால் ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தனவினால் தனியார் வைத்தியசாலைகளின் ஆய்வுகூட பிரதானிகளுக்கு இந்த ஆலோசனை வழிகாட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய சிகிச்சைக்கு பொறுப்பான விசேட வைத்திய நிபுணர் அல்லது வைத்திய அதிகாரி ஆகியோரால் அனுமதி வழங்கப்பட்டால் மாத்திரமே பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பரிசோதனைக்கான மாதிரிகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதன் முடிவுகள் கிடைக்கப் பெறும் வரை, குறித்த நபர்களை வீடுகளில் அல்லது பொருத்தமான இடங்களில் தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவித்தல் வழங்கப்பட வேண்டும். தொற்று உறுதிப்படுத்தப்பட்டால் அது குறித்து சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவிற்கும் உரிய பிரதேசத்தின் சுகாதார மருத்துவ அதிகாரிக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நபருக்கும் அறிவிக்கவேண்டியது வைத்தியசாலை நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

மேலும் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபரை அங்கீகரிக்கப்பட்ட கொவிட் சிகிச்சை நிலையத்தில் அனுமதிப்பதும் குறித்த வைத்தியசாலை நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இவ்வாறு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்களை மீறும் அல்லது பின்பற்றாத தனியார் வைத்தியசாலைகளுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி இரத்துச்செய்யப்படும் என்று அந்த வழிகாட்டல் அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-4)

# அதிகூடிய வயதான பெண் கொரோனாவால் உயிரிழப்பு

(கொழும்பு)

காலி மாவட்டத்தின் கினிமெல்லகக பகுதியில் கொரோனாத் தொற்று நோயால் பாதிக்கப்பட்ட 103 வயது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பிரதேச சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் இது வரை கொரோனா வைரஸ் தொற்று நோயால் பாதிக்கப்பட்டு இறந்த அதிககூடிய வயதான நபராக இவர் உள்ளார்.

சில நாட்கள் காய்ச்சல் உள்ளிட்ட உபாதைகளால் பாதிக்கப்பட்ட நிலையில் இரண்டு நாட்களுக்கு முன்பு தனது வீட்டில் அவர் உயிரிழந்தார்.

முன்னதாக கடந்த பெப்ரவரி மாதம் காலியைச் சேர்ந்த 102 வயதான நபர் கொரோனாவால் உயிரிழந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# செய்தி வாசனை!

ஒரு மனிதன் கோபமாக இருக்கின்றானா? மகிழ்ச்சியாக இருக்கின்றானா? என்கின்றதை அவன் முகத்தைப் பார்த்தே கண்டு பிடித்துவிடலாம் அதாவது.

முகபாவங்கள் மூலமாக மனிதன் தன்னுடைய மனநிலையை வெளிப்படுத்துகின்றான்.

ஆனால் விலங்குகள் அப்படி இல்லை. மற்ற பாலூட்டிகள் எல்லாம் தம்முடைய சிற்றினத்தில் உள்ள உறுப்பினர்களின் மனநிலையையும் சமூக அந்தஸ்தையும் வாசனை மூலமாக கண்டு பிடிக்குதாம்.

ஒரு தாய்க்கும் குட்டிக்கும் இடையில் ஏற்படுகின்ற பிணைப்பிலே தான், வாசனையைத் தேர்ந்தெடுக்கின்ற பழக்கம் உண்டாகின்றதாம்.

ஒரு குட்டி பிறந்தவுடனே தன்னுடைய உடம்புடன் பரவியிருக்கின்ற பிரசவகாலத் திரவங்களின் வாசனையும், தாயின் உடல் வாசனையும் ஒன்றாக இருக்கிறதனாலே தான் தாயை நாடி சரியாக ஓடுகின்றது. அதற்குப் பின்பு பால் குடிக்கும் போதும், தாய்- குட்டியை நக்கி தன் எச்சிலைக் குட்டியின் உடம்பிலே பூசிவிடுகின்ற போதும் இந்த வாசனை ஒற்றுமை நீடிக்கின்றது.

மனிதனைத் தவிர மற்ற பாலூட்டி விலங்குகள் எல்லாம் பெர்மோன்கள் எனப்படுகின்ற ஆவியாகின்ற வேதிச் சேர்மங்களின் உதவியால் தான் செய்திகளைப் பரப்புகின்றன என்பது அறிவியல் உண்மை. இந்த வேதிச் சேர்மங்களை அடையாளம் கண்டு கொள்ள அந்த விலங்குகளிடம் பல புலன்கள் உண்டு. உணர்வு தூண்டும் மூலக்கூறுகள் காற்றில் பரவி விலங்குகளின் மூக்கில் நுழைந்து வாசனை உணர்வை உண்டாக்குகின்றது.

அங்கேயிருந்து மோப்பக்குமிழ்களில் உள்ள விசேடமான ஏற்பிகளுக்குச் செய்தி போகின்றது. அங்கே அது பொருள் காணப்பட்டு விலங்கின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது.

மோப்பக்குமிழ்களை நீக்கிவிட்டால் தாய்ப்பாசமும் பிள்ளைப்பாசமும் மறைந்து போய்விடுகின்றதாம்.

குட்டிகளை தாய் புறக்கணித்துவிடுகின்றதாம். சில சமயங்களில் மோப்ப உணர்வை இழந்த தாய், தன்னுடைய குட்டிகளையே சாப்பிடுகின்றதாம்.

1962 இலே லண்டனில் எம். ப்ருஸ் என்கின்றவர் தலைமையில் ஒரு குழு ஆராய்ச்சி செய்ததாம். அவர்கள் ஒரு வேடிக்கையான விளைவைக் கண்டுபிடித்தார்களாம். அதற்கு ப்ருஸ் விளைவு என்றே பேர் வைத்துவிட்டார்களாம்.

அது என்ன விபரம் என்றால் கருவுற்ற ஒரு பெண் சுண்டெலி, வேறு ஒரு ரகத்தைச் சேர்ந்த ஆண் சுண்டெலியின் வாசனையை முகர நேர்ந்தால் அதன் கர்ப்பம் தடைப்பட்டுப் போகின்றதாம். கலைந்து போய்விடுதாம். அது தான் ப்ருஸ் விளைவு.

நாய்கள் தரையைத் தேய்த்துப் பின்னங்கால்களால் மண்ணை உதைத்து வீசும். அப்பொழுது அதன் உள்ளங்காலில் இருக்கின்ற சுரப்பிகளில் இருந்து ஒரு சுரப்பு தலையில் பரவும். அது என்ன தெரியுமா?

நாய் தன்னுடைய அனுபோகப் பரப்பைக் குறித்து வைக்கின்ற ஒரு உத்தி அது. நாய், பூனை இதெல்லாம் ஓடி வந்து உங்கள் கால்களில் உடம்பை தேய்த்தால்.. ஆகா.. எவ்வளவு எஜமான் விசுவாசம் இவைகளுக்கு அப்படி என்று எண்ணி ஏமாந்து போய்விடாதீர்கள். உண்மையில் உங்களை அதுகளோடு வளர்ப்புப் பிராணியா மற்ற நாய், பூனைகளுக்கு அடையாளம் காட்டி வைக்கிறதற்காகத் தான் உங்கள் மேல் வாசனையைப் பூசி வைக்கின்றது.

யானைகள் மரக்கிளைகளை ஒடித்து வைக்கும். தந்தங்களாலே மரத்தைக் கீறி வைக்கும். புலி நகங்களாலே மரப்பட்டைகளைக் கீறிவைக்கும். இது எல்லாம் அடையாளச் சின்னங்கள். அதைப் பார்த்து மற்றது புரிந்து கொள்ளும்.

ஆக மிருகங்களுக்கு மொழிப் பிரச்சினை இல்லை. வாசனை மூலமாகவே செய்திகளை பரிமாறிக் கொள்கின்றது. வாசனை மூலமாகவே செய்திகளைத் தெரிந்திருக்கின்ற மனிதர்களும் உண்டு.

தன் வீட்டிலே உட்கார்ந்து கொண்டு எதிர்த்த வீட்டிலே என்ன சமையல் என்கின்றதை மிகவும் சரியாக கண்டுபிடிக்கின்ற புத்திசாலிகள் உண்டு.

ஒருத்தர் சொன்னார். எதிர்த்த வீட்டுக்காரரிடம் இன்றைக்கு உங்கள் வீட்டிலே கத்திரிக்காய் சாம்பார் சரியா? என்றார். எப்படிக் கண்டு பிடித்தீர்கள்? என்றார் அவர் ஆச்சரியமாக. அது ஒன்றும் பெரிய விடயம் இல்லை. எங்கள் தோட்டத்தில் காய்த்திருந்த கத்திரிக்காயைக் காணவில்லை. அது தான் என்றார் இவர்.

# பயணக் கட்டுப்பாட்டை மீறியோரை காட்டிக் கொடுத்தது ட்ரோன்

(கொழும்பு)

பயணக் கட்டுப்பாடுகளை மீறுபவர்களைக் கண்டறிந்து கைது செய்வதற்காக கொழும்பு - வாழைத்தோட்டம், மாளிகாவத்தை மற்றும் கிராண்ட்பாஸ் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ட்ரோன் கண்காணிப்பு நடவடிக்கையின்போது நேற்று முன்தினம் குறைந்தது 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

மேலும் 20 பேர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

கொழும்பு மற்றும் சனநெரிசல் அதிகமாகவுள்ள பகுதிகளில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறுவோரை கண்காணிக்க ஆளில்லா விமானங்கள் பயன்படுத்தப்படும் எனப் பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண முன்னதாக எச்சரித்தார்.

ஆளில்லா விமானத்தைப் பயன்படுத்தி தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோரைக் கண்காணிக்கும் பணியில் விசேட பணிக்குழுவினர் மற்றும் பொலிஸார் நேற்று முன்தினம் முதல் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ட்ரோன் கண்காணிப்பு இன்றும் கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் தொடரும் எனப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

### செல்வ வளம் தரும் வெள்ளிக்கிழமை விரதம்

(தொடர்ச்சி)

## கிரக தோஷ பரிகாரம்



சனி பிரதோஷ வழிபாடு செய்து வருவது சனிக்கிரகத்தால் ஏற்பட்ட பீடையைப் போக்கும்.

சுத்தமான ஆற்று மண்ணை எடுத்து செவ்வாய் கிரகத்தை அதில் ஆவாகித்து மஞ்சள் மலர்களால் பூஜித்து விரதம் இருக்க வேண்டும். அவ்வாறு செய்வது செவ்வாய் கிரக பீடையை நீக்கும்.

புதன் கிரக தொல்லையில் இருந்து விடுபட அதிகாலையில் விஷ்ணுவை அபிஷேக, ஆராதனை செய்து பூஜிக்க வேண்டும்.

குரு பார்க்க கோடி நன்மை தரும். குரு கிரக பீடையைப் போக்க அதிகாலையில் 4.30 மணி முதல் 6 மணிக்குள் தட்சிணாமூர்த்தி அல்லது கிருஷ்ண பரமாத்மாவை வெள்ளை மலர்களாலும் துளசியாலும் பூஜித்து ஒரு மண்டலம் விரதம் இருக்க வேண்டும்.

சுக்கிர கிரக பீடை விலக வெள்ளிக்கிழமை இரவில் தீபத்தை ஏற்றி அதில் அம்பிகையை பூஜித்து விரதம் இருக்க வேண்டும்.

ராகு, கேதுகள் தோஷம் விலக திருநாகேஸ்வரம், கீழப்பெரும்பள்ளம், காளஹஸ்தி போன்ற ஆலயங்களுக்குச் சென்று பூஜை செய்து விரதம் இருப்பது நன்மை தரும்.

**சுக்கிரனுக்கு உரியவை**

தானியம் - மொச்சை
மலர் - வெண்தாமரை
வஸ்திரம் - வெள்ளை நிற ஆடை
ரத்தினம் - வைரம்
நிவேதனம் - வெண் அன்னம்
சமித்து - அத்தி
உலோகம் - வெள்ளி
சுவை - புளிப்பு

**மகா லட்சுமி ஹோமம்**

எடுத்த காரியம் தடங்கல் இன்றி நிறைவேற வெற்றி அடைய கணபதி ஹோமம் செய்கிறார்கள். அதைப் போல் வாழ்க்கையில் வளம் நிறைய கடன் சுமை விட்டொழிந்து செல்வம் சேர மகாலட்சுமி ஹோமம் செய்ய வேண்டும்.

லட்சுமி தேவியின் கடைக்கண் பார்வை நம் மீது பட்டாலே போதும் நீங்காத செல்வம் நிறைந்து வழியும். கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல் முகத்தான் நாராயணனின் அருளும் கிடைத்து விடும்.

மகிழ்ச்சியான மணவாழ்க்கை, ஆன்மிக வளர்ச்சி மற்றும் பொருள்வளம், சீரான வாழ்க்கை, வாழ மகாலட்சுமி ஹோமம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது அவசியம். கணவன் - மனைவி இடையே பிரச்சினைகள் சரியாகி சுபீட்சம் ஏற்படும்.

வெள்ளிக்கிழமை மகாலட்சுமி ஹோமம் செய்ய மிகவும் நல்லநாள். மேலும் பௌர்ணமி அன்றும் மகாலட்சுமி ஹோமம் செய்யலாம். மகாலட்சுமி ஹோமம் செய்து மகத்தான வாழ்க்கை பெறுவோம்.

ஸ்ரீலட்சுமி காயத்ரி
ஓம் மஹாலட்சுமி ச வித்மஹே
விஷ்ணு பத்னீ ச தீமஹி
தந்நோ லட்சுமி; ப்ரசோதயாத்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## மருந்து என்ற போர்வையில் போதைப் பொருள் கடத்தல்

### ஒருவர் கைது

(கொழும்பு)

நோயாளி ஒருவருக்கு மருந்து எடுத்துச் செல்லும் போர்வையில் போதைப்பொருட்களை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் இங்கிரிய - கெட்டகெதல்ல வீதித் தடையில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது இவரது வாகனத்திலிருந்து 5 கிராம் ஹெரோயின் மற்றும் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (நி-4)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 636 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 636 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சரியான முறையில் முகக்கவசம் அணியாமை, மாகாண எல்லைகளைக் கடந்தமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## சஜித் விரைவில் குணம் பெற வேண்டும்

### ஜனாதிபதி, பிரதமர் டுவிட்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது பாரியார் ஆகியோர் விரைவில் குணமடைய வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி, அவர்கள் இருவரும் விரைவில் குணமடைந்து வர பிரார்த்திப்பதாக தெரிவித்துள்ளார்.

இதேநேரம், கொரோனாத் தொற்றுக்கு உள்ளான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அவரது பாரியார் ஆகியோர் நல்ல ஆரோக்கியத்துடன் விரைவில் மீண்டுவர வேண்டுமென பிரார்த்திப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (நி-4)

## போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தாருங்கள்

### சுகாதார சேவையாளர்கள் கோரிக்கை

(கொழும்பு)

சுகாதார சேவையாளர்களுக்குத் தேவையான பேருந்து வசதிகளைப் பெற்றுக்கொடுக்குமாறு ஒன்றிணைந்த சுகாதார சேவையாளர் சங்கம் அரசாங்கத்தை கோரியுள்ளது.

அந்தச் சங்கத்தின் பிரதான செயலாளர் டெம்பிட்டியே சுகதானந்த தேரர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

சில சுகாதார சேவையாளர்கள் பணம் செலுத்தி வாடகை வாகனங்களில் பணிக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

*மனிதனுக்குள் இருக்கும் தெய்வத்தை உணர்ந்து வாழ்வதுதான் நமது இலட்சியம்.*
*– ஜெயகாந்தன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அர்ப்பணிப்போடு சேவையாற்ற வேண்டிய நேரம் இது...

இலங்கை முழுவதிலும் கொரோனாத் தொற்று மிக வேகமாகப் பரவி வருகிறது.

தவிர, அறிவிக்கப்படுகின்ற இறப்புகளின் எண்ணிக்கையை விட, உண்மையான இறப்புகளின் எண்ணிக்கை அதிகம் என்ற தகவல்களும் உண்டு.

எதுவாயினும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாக்கின்ற நடைமுறைகளை இன்னமும் பொதுமக்கள் பின்பற்றவில்லை என்ற உண்மையையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதற்கு மேலாக, வடபகுதியில் கொரோனாத் தொற்றாளர்களைப் பராமரிக்கின்ற விடயத்தில் இன்னும் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென்ற கருத்தை கொரோனாத் தொற்றாளர்கள் முன்வைக்கின்றனர்.

இவையாவற்றுக்கும் மேலாக, வடபகுதியில் உள்ள மருத்துவர்கள் தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்க வேண்டிய காலசூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்பது பலரதும் கருத்தாகவுள்ளது.

பொதுவில் வடபகுதியைப் பொறுத்தவரை மருத்துவ சேவையின் தரம் யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ சேவையை வைத்தே கணிப்பீடு செய்யப்படுகிறது.

எனவே யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள் அர்ப்பணிப்போடு ஆற்றுகின்ற சேவையானது வடபகுதி முழுமையிலும் உள்ள வைத்தியசாலைகளின் மருத்துவ சேவையை உயர்ந்த தரத்துக்கு இட்டுச் செல்லும்.

இருந்தும் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள் சிலர் பொறுப்புடன் நடப்பதில்லை என்ற விமர்சனங்கள் கடுமையாக எழுந்துள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் எத்தனையோ மருத்துவ நிபுணர்களும் மருத்துவர்களும் இதர சுகாதாரப்பணியாளர்களும் மிக உன்னதமான சேவையை வழங்கி நிற்கையில்,

ஒரு சிலர் நடந்து கொள்கின்ற பொறுப்பற்ற செயல் ஒரு பெரும் மருத்துவ நிலையத்தின் நற்பெயருக்கு மாசு கற்பித்து விடக் கூடாது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

ஆக, எவருக்கு என்ன நடக்கும் என்பதை எவரும் நிறுதிட்டமாகக் கூறமுடியாத இந்த நேரத்தில்,

கொரோனாத் தொற்றால் இறந்து போனால் இறுதி ஊர்வலத்தில்கூட உறவுகள் வரமுடியாத காலசூழலில், யாருக்கெல்லாம் மருத்துவர் என்ற பதவியை கடவுள் தன் பிரதிநிதித்துவமாக வழங்கினாரோ அவர்கள் அத்தனைபேரும் பொருள் ஈட்டுதல் என்பதைக் கடந்து; தர்மத்தினூடு அருள் ஈட்டுதல் என்பதை இவ்வேளையில் செய்ய வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

# கொரோனா நோயாளிகளை அனுமதிப்பதில் தாமதம்காட்டும் மருத்துவமனைகள்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கோவிட் நோயாளிகளை அனுமதிப்பதில் சில மருத்துவமனைகள் தாமதம்காட்டுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி அசேல குணவர்தன தெரிவித்தார்.

1990 நோயாளர் காவு வாகனங்களில் அழைத்து வரப்படும் நோயாளிகளை அனுமதிப்பதில் மருத்துவமனைகள் தாமதம் காட்டிய சம்பவங்கள் குறித்து தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு, சுகாதார அமைச்சகம் சில நாட்களுக்கு முன்னர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில் நோயாளியை அனுமதித்த பின்னர் நோயாளியின் நிலைமைகளை கருத்தில் கொண்டு வேறு மருத்துவமனை அல்லது இடைநிலை பராமரிப்பு மையத்திற்கு மாற்ற முடியும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி அசேல குணவர்தன தெரிவித்தார். (ம-3)

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

## மருத்துவர்கள், தாதியர்களின் தொலைபேசிகளை திருடிய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த சில மாதங்களாக மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்களின் தொலைபேசிகளைத் திருடிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

22,24 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மருத்துவர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்களின் தொலைபேசிகள் திருட்டுப் போவதாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த விசாரணையில் சந்தேக நபர்கள் இருவரும் நேற்று அவர்களது வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் திருடப்பட்ட 7 தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன. மேலும் சில தொலைபேசிகள் தொடர்பில் தகவல்கள் இல்லை.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமையின் போது, மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் தமது தொலைபேசிகளை சார்ஜ் செய்ய வைக்கும் போது சந்தேக நபர்கள் இருவரும் நூதமாகத் திருடி வந்துள்ளனர் என்பது விசாரணையில் தெரிய வந்தது.

சந்தேக நபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம,3,33)

## பயணத் தடை வேளை வர்த்தக நிலையத்தில் திருட்டு

(குப்பிழான்)

பயணக் கட்டுப்பாடு நடைமுறையிலிருந்த காலப்பகுதியான நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வேளையில் ஏழாலைச் சந்திப் பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் வர்த்தக நிலையமொன்றில் திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது.

குறித்த வர்த்தக நிலையத்தின் ஓட்டைப் பிரிந்து உள்ளே இறங்கிய திருடர்கள் பால்மாப் பைக்கற்றுக்கள், மீன் ரின், சவர்க்காரம் உள்ளிட்ட சுமார் ஐம்பதாயிரம் பெறுமதியான பொருட்கள், 5 ஆயிரம் ரூபாய் பணம் என்பன திருடர்களால் திருடிச் செல்லப்பட்டுள்ளது.

திருடர்களில் ஒருவன் ஓடு பிரிந்து வர்த்தக நிலையத்திற்குள் இறங்கும் காட்சி வர்த்தக நிலையத்தினுள் பொருத்தப்பட்டுள்ள சிசிரிவி காணொளியில் பதிவாகியுள்ள போதும் திருடன் முகக்கவசம் அணிந்திருந்தமையால் உடனடியாக அடையாளம் காண முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பில் வர்த்தக நிலைய உரிமையாளரால் நேற்று முன்தினம் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-18)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## உங்களின் சிறந்த ஆசான்

- கடவுளிடம் அனைத்து இயல்புகளும் இருக்கின்றன. ஆனால், மனித இயல்பு மூலமாகத்தான் நாம் அவரைக் காண இயலும்.
- தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதை விழிப்படையச் செய்து எழுந்திருக்கச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு கடமையும் புனிதமானது தான். கடமையில் பக்தியுடன் இருப்பது தெய்வவழிபாட்டில் மிக உயர்ந்த முறையாகும்.
- ஒருவனுடைய பண்பை உருவாக்குவதில் இன்பம், துன்பம் இரண்டுமே சரிசமமான பங்கைப் பெறுகின்றன. அதிலும் இன்பத்தைவிட துன்பமே சிறந்த ஆசானாக அமைகிறது.
- வாழ்க்கையில் தன்னிடத்தில் ஒன்றை இழுத்துக்கொள்ளும் சக்தியைப்போல அதை விலக்கும் சக்தியும் நம்மிடம் உள்ளது.
- தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத்தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

# உருமாறிய கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசிகள் வலிமையாக செயற்படுகின்றன

## இங்கிலாந்து ஆய்வின் அதிரடித் தகவல்

(லண்டன்)

**‘பி.1.617.2’ என்ற உருமாறிய கொரோனாவுக்கு எதிராக பைசர் மற்றும் பயோஎன்டெக் கூட்டாக உருவாக்கியுள்ள தடுப்பூசி 88 சதவீத செயற்படும் திறனைக்கொண்டுள்ளது.**

உருமாறிய கொரோனாவுக்கு எதிராகதடுப்பூசிகள் மிக வலிமையாக செயற்படுவது இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஆய்வு முடிவில் தெரியவந்துள்ளது.‘பி.1.617.2’ என்ற உருமாறிய கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசிகள் மிகுந்த வலிமையுடன் செயற்படுகின்றன என்பது இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவு மூலம் தெரியவந்துள்ளது.

இது குறித்து இங்கிலாந்து பொதுச்சுகாதாரத்துறை கூறுகையில், ‘பி.1.617.2’ என்ற உருமாறிய கொரோனாவுக்கு எதிராக பைசர் மற்றும் பயோஎன்டெக் கூட்டாக உருவாக்கியுள்ள தடுப்பூசி 88 சதவீத செயற்படும் திறனைக் கொண்டுள்ளது.

இதேபோன்று ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகமும், அஸ்ட்ராஜெனேகா மருந்து நிறுவனமும் உருவாக்கியுள்ள தடுப்பூசி இரண்டாவது டோஸ் செலுத்திய பின்னர்60 சத வீத செயல்திறனைக் கொண்டுள்ளது என்று தெரிவித்தது.

இருப்பினும் இவ்விரு தடுப்பூசிகளையும் ஒரே ஒரு டோஸ் செலுத்திய நிலையில், அதன் செயல்திறன் 33 சதவீதமாக உள்ளது எனவும் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி இங்கிலாந்து சுகாதார அமைச்சர்மேத் ஹான்காக் கூறும்போது,

கொரோனா வைரஸ் வகைகளுக்கு எதிராக வலுவான பாதுகாப்பைப் பெறுவதில் இரண்டாவது டோஸ் ஊசிபோட்டுக்கொள்வது எத்தனை முக்கியமானது என்பதுவும் தெளிவாகிறது” என அவர் குறிப்பிட்டார். (4-8)

## பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்



(மணிலா)

பிலிப்பைன்ஸின் தென்கிழக்கு பகுதியில் உள்ள டாவோ ஓரியண்டல் மாகாணத்தில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. மாகாணத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஜோஸ் அபாட் சாண்டோஸ் நகரை மையமாகக் கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.5 புள்ளிகளாக பதிவானது.

இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 113 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக பிலிப்பைன்ஸ் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இதனால் பீதியடைந்த மக்கள் அலறியடித்தபடி வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

இந்த நடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை. (4-8)

## தமிழக அரசின் புதிய ஏற்பாடு

(சென்னை)

நேற்று முதல் ஒரு வாரத்திற்கு தளர்வற்ற முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதையொட்டி கடந்த 2 நாட்களாக அனைத்துக் கடைகளையும் திறக்க அனுமதிக்கப்பட்டது.

மக்கள் தாங்களுக்கு ஒரு வாரத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு இந்தத் தளர்வு வழங்கப்பட்டது.

காய்கறி, பழம் ஆகிய வற்றை அரசு மூலம் வாகனங்களில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் 4 ஆயிரத்து 380 வாகனங்கள் மூலம் காய்கறிகள் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-8)

## இத்தாலி கேபிள் கார் விபத்தில் 14 பேர் பலி!

(ரோம்)

இத்தாலியின்மெகியோரே வாவிக்கு அருகிலுள்ள மலைப் பாங்கான பிரதேசத்தில் கேபிள் கார் ஒன்று உடைந்து கீழே விழ்ந்ததில், அதில் பயணித்த 14 பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சுற்றுலா பிரதேசம் ஒன்றில் இடம்பெற்ற இந்த விபத்தில், தமது பிரஜைகள் ஐவரும் உயிரிழந்துள்ளதாக இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கேபிள் கார் உடைந்து விழ்ந்த இடத்திலேயே அதிகளவானோர் உயிரிழந்தனர் என்றும், இதன்போது, உயிருடன் மீட்கப்பட்ட இரு சிறுவர்களில் ஒருவர் சில மணிநேரத்தில் உயிரிழந்துள்ளதாக இத்தாலிய பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மலைகளுக்கு மேலாக பயணித்த இந்த கார், 300 மீற்றர் உயரத்திலிருந்து மலைச்சரிவொன்றில் விழ்ந்து, பள்ளத்தில் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரியவந்துள்ளது. (4-8)


**உலகளவில் கொரோனா**

உயிரிழப்பு :-3 480 948

தொற்று :-167 642 457

(நேற்றைய நிலவரம்)

## இந்தியாவில் 3 இலட்சத்திற்கு மேல் பலியெடுத்த கொரோனா



(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று நோயுடன் தொடர்புடைய மரணங்களின் எண்ணிக்கை நேற்று 3 இலட்சத்தைக் கடந்துள்ளதாக இந்திய மத்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை வரை 3 ஆயிரத்து 741 பேர் கொரோனாவால் உயிரிழந்த நிலையில் 3 இலட்சம் மரணங்கள் என்ற இமாலய இலக்கை இந்தியா கடந்துள்ளது.

கடந்த ஒரு மாதத்துக்கும் குறைந்த காலப்பகுதியில் இந்தியாவில் ஒரு இலட்சத்துக்கு அதிகமான மரணங்கள்பதிவாகியுள்ளன.(4-8)

## கொங்கோவில் எரிமலை வெடிப்பு

❖15 பேர் பலி

❖500 வீடுகள் சேதம்



(கொங்கோ)

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்கு பகுதியில் எரிமலை வெடிப்பினால் உண்டான லாவா வெளியேற்றத்தால் 15 பேர் உயிரிழந்துள்ளதுடன், 500 க்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகியுள்ளதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு கோமா நகரத்தின் வடக்கே அமைந்துள்ள நைராகோங்கோ எரிமலையின் வெடிப்பு, நகரத்திலிருந்து அருகிலுள்ள எல்லையைத் தாண்டி ருவாண்டாவிற்கு 5 ஆயிரம் பேரை தப்பிச் செல்ல வழிவகுத்தது.

மேலும் 25 ஆயிரம் பேர் சாகேயில் வடமேற்கில் தஞ்சம் புகுந்ததாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதிய அறிக்கைகளும் தெரிவித்துள்ளன.

இந்த அவசர நிலையினால் 170 க்கும் மேற்பட்ட சிறுவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் அஞ்சப்படுவதுடன், மேலும் யுனிசெப் அதிகாரிகள் பேரழிவைத் தொடர்ந்து ஆதரவற்ற சிறுவர்களுக்கு உதவ போக்குவரத்து மையங்களை ஏற்பாடு செய்வதாகக் கூறியுள்ளனர். (4-8)

## மீன் பிடிக்கச்...

கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுக் காலை அரியா மடுப் பகுதியில் அமைந்துள்ள குளத்தில் மீன் பிடிக்க சென்றுள்ளார்.

இதன்போது அவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தில் 3 பிள்ளைகளின் தந்தையான ஜெயதாஸ் (வயது-44) என்ற நபரே மரணமடைந்தவராவார். (ம-3,299)

## கிணற்றுக்குள்...

கிழக்கு பகுதியைச் சேர்ந்த 17 வயதான மாணவி ஒருவர் நேற்று திங்கட்கிழமை நண்பகல் கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்துள் ளார்.

தண்ணீர் எடுப்பதற்காக கிணற்றடிக்கு சென்றபோது ஏற்பட்ட வலிப்புக் காரணமாக மாணவி கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த க.தயாளினி என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-3,30)

## மின்சாரம் தாக்கி...

- குறிகாட்டுவான் இறங்குதுறையில் வீதி அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான பாதை படகு திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஒருவார காலமாக மேற்கொள்ளப்பட்டுவரும் குறித்த திருத்தப் பணியில் நேற்றைய தினம் குறித்த கடற்படை சிப்பாய் நீரில் இறங்கி பணியாற்றிக் கொண்டிருந்த நிலையில் மின்சாரம் தாக்கியுள்ளது.

உடனடியாக புங்குடுதீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதும் அவர் உயிரிழந்துள்ளார். (ம-3,33)

## கொரோனாத்...

நேற்று அதிகாலை திடீர் சுகயீனமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் முன்னர் வீட்டிலேயே உயிரிழந்திருக்கின்றார்.

இதனையடுத்து இறப்பின் பின் நடத்தப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமடைந்த நபருக்கு கோவிட் தொற்று பீடித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த குறித்தநபர் நேற்றுமுன்தினம் காலை சுகயீனம் காரணமாக வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்பாகவே அவர் மரணமடைந்திருந்தார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் யாழில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-3,18,33,299)

## உழவு இயந்திரம்...

திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் கள்ள மணலுடன் சென்ற உழவு இயந்திரம் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினரின் சைகையை மீறிச் சென்ற உழவு இயந்திரம் மீதே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது உழவு இயந்திரத்தின் பெரிய சக்கரம் மற்றும் பின் சக்கரம் ஆகியவற்றில் சன்னங்கள் பாய்ந்துள்ளன.

இந்நிலையில் உழவு இயந்திரத்தில் பயணித்தவர்கள் மணலுடன் உழவு இயந்திரத்தைக் கைவிட்டு விட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

கைப்பற்றிய உழவு இயந்திரத்தை இராணுவத்தினர் கொடிகாமம் பொலிஸாரிடம் பாரப்படுத்தியுள்ளனர். இச்சம்பவம் நாடு பூராக பயணத்தடை அமுலில் இருந்த வேளையில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18,33,60)

## மகேஸ்வரக்...

யரும் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய பிரதம குருவுமாகிய பிரம்மஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் நேற்று அதிகாலை இறைபதம் எய்தினார்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக இருந்து சைவசமயத்துக்கு பெரும் பணியாற்றிய பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் வேதாகமங்களில் விற்பன்னராக விளங்கியதுடன் அந்தணச் சிவாச்சாரியர்களின் மதிப்பிற்குரியவராகவும் விளங்கினார்.

அவரின் இழப்புக்கு இந்துசமயத் தலைவர்கள் பலரும் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளனர். (ம-3)

## பயணத் தடை...

வேண்டும்.

02. பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட காலப்பகுதியில் வங்கிச் சேவை முன்னெடுக்கப்பட வேண்டும். குறைந்தபட்ச ஆளணியை கொண்டு முன்னெடுக்க வேண்டும்.
03. ஆடை விற்பனை நிலையங்கள், ஆடம்பர தேவைக்கான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட அனுமதியில்லை.
04. மரக்கறி,மீன்கடை, இறைச்சிக் கடை, அத்தியாவசிய பொருட்கள் விற்பனையாகும் கடைகளை திறப்பதற்கு மட்டுமே பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்படும் காலத்தில் அனுமதிக்கப்படும்.

இதேவேளை அத்தியாவசிய தேவை என பெறப்படும் அடையாள அட்டைகளை பயன்படுத்தி சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வாறானவர்கள் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இன்று, மே 31 மற்றும் ஜூன் 4ஆம் திகதிகளில் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி, அருகிலுள்ள கடைகளுக்குச் சென்று, அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கான கட்டுப்பாடு தளர்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நாட்டை முடக்கு...

ளுக்கு காரணம் எனவும் கூறியுள்ளது.

இதன் காரணமாக கோவிட் நிமோனியா நிலைமை அதிகரித்து நோயாளிகள் வீடுகள், வீதிகள், வைத்தியசாலைகளில் அனுமதித்தவுடன் உயிரிழப்பதாக சங்கம் தெரிவித்துள்ளது.

வைத்தியசாலையில் நோயாளிகளின் எண்ணிக்கை உச்சக்கட்டத்தை எட்டியமை, அறிகுறிகள் உள்ள நோயாளிகளை தவறவிட்டமை உட்பட பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் சமந்த ஆனந்த தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் சில தினங்களுக்கு நாட்டை முடக்குவதன் மூலமாக கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனால் வேலைத் திட்டம் ஒன்றை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டியது அவசியம் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-3)

## இலங்...

ரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டில்கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரிக்கும் அதேவேளை, கொரோனா மரணங்களின் எண்ணிக்கையும் உயர்வடைகின்றது. எதிர்வரும் நாட்களில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும்.

ஒவ்வொருவரும் கொரோனாத் தடுப்பு சுகாதார விதிமுறைகளை அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் உரியவாறு கடைப்பிடிக்க வேண்டும். பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் இருக்கும் நேரங்களில் மக்கள் அனைவரும் வீடுகளில் இருக்க வேண்டும்.

மக்களின் பாதுகாப்பு அவர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. கட்டுமீறிப் போன கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டுமெனில் அது மக்களின் நடவடிக்கைகளில் தான் தங்கியுள்ளது" என்றார். (ம-3)

# நாட்டில் நேற்று 2,970 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2,970 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 167,171ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## மன்னாரில்...

இருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)






















# அடுத்துவரும் நாட்களில் வீட்டில் பதிவாகும் கொரோனா மரணங்கள் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

அடுத்துவரும் நாட்களில் கொரோனா தொற்று காரணமாக வீடுகளில் பதிவாகும் மரணங்கள் அதிகரிக்கலாம் என கொழும்பு பிரதான சட்டவைத்திய நிபுணர் அஜித் தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அவ்வாறு வீடுகளில் மரணிப்போரின் மரண விசாரணைகள் நிறைவுறும் வரை, அச்சடலங்களை களஞ்சியப்படுத்திவைக்க குளிரூட்டப்பட்ட கொள்கலன்கள் பல தற்போது தயார் செய்யப்பட்டுள்ளன.

தற்போது கொரோனாவினால் மரணிப்போரின் சடலங்களால் வைத்தியசாலைகள் நிரம்பவில்லை என சுட்டிக்காட்டிய அவர், அடுத்துவரும் நாட்களில் ஏற்படக்கூடிய எச்சரிக்கையுடனான நிலைமையை கையாள இவ்வாறான குளிரூட்டப்பட்ட கொள்கலன்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

"உண்மையில் வீடுகளில் ஒரு மரணம் நிகழ்ந்தால், குறித்த சடலமும், வைத்தியசாலைகளில் பதிவாகும் மரணங்களின் போதான சடலங்களும் வைத்தியசாலை பிரேத அறையிலேயே வைக்கப்படும். அவ்வாறான நிலையில் வீடுகளில் பதிவாகும் மரணங்கள் அதிகரித்தால் பிரேத அறையில் இடப்பற்றாக்குறை பிரச்சினை ஏற்படலாம்.

எனவேதான் குளிரூட்டப்பட்ட கொள்கலன்கள், அவ்வாறான சடலங்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ளது" என விசேட சட்ட வைத்திய நிபுணர் அஜித் தென்னகோன் குறிப்பிட்டுள்ளார்.

(ம-03)

# பி.சி.ஆர் பரிசோதனைகள் யாழில் வழமைபோல் முன்னெடுக்கப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ். பல்கலை மருத்துவபீடங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் பிசிஆர் பரிசோதனைகள் வழமைபோல் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரசாயனப் பொருட்களில் தட்டுப்பாடு காரணமாக வடக்கில் பிசிஆர் பரிசோதனைகள் தடைப்பட்டுள்ளதாக ஊடகம் ஒன்றில் செய்தி வெளியாகியிருந்தது.

பி.சி.ஆர் பரிசோதனைகள் தானியங்கி செயலி மூலமும் இரசாயனங்களை பயன்படுத்தி கையேடு முறைமூலமாக இரு முறைகளில் செய்யப்படுவதாக கூறப்படுகின்றது.

இதில் இரசாயனத்தை பயன்படுத்தி செய்யப்படும் பிசிஆர் பரிசோதனையே தடைப்பட்டுள்ளதாகவும் தானியங்கி மூலம் செய்யப்படும் பிசிஆர் சோதனை வழமைபோல் நடைபெறுகின்றது என்று கூறப்படுகின்றது.

பிசிஆர் பரிசோதனைக்கு பயன்படுத்தும் இரசாயன பதார்த்தம் இன்றைய தினம் கிடைக்கவுள்ளதாகவும் வழமைபோல் பி.சி.ஆர் சோதனைகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# தீக்காயத்துக்குள்ளான இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

குப்பைக்கு தீவைக்கும்போது அதில் தவறுதலாக விழுந்ததில் தீக் காயத்துக்குள்ளான இளம் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் நல்லூர் வடக்கைச் சேர்ந்த 28 வயதுடைய தர்ஷியா சுஜீவன் என்ற 2 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் கடந்த 20 ஆம் திகதி தனது வீட்டு வளவிலுள்ள குப்பைக்கு தீவைத்துள்ளார். இதன்போது கல்லொன்றில் கால் தட்டுப்பட்டு தவறுதலாக எரிந்து கொண்டிருந்த குப்பைக்குள் விழுந்துள்ளார். இதனால் எரிகாயங்களுக்குள்ளான அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சைபலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

(ம-3)


ZOOM CLASSES ஆரம்பம்
சித்ரா பொன்ஸ் கல்வி நிலையம்
அல்வாய்
29.05.2021 சனிக்கிழமை முதல் மாலை நேரங்களில் 11 ஆம் 10 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு சகல பாடங்களும் நடைபெறும். குறூப்பில் இணைந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்.
( முதல் 2 வகுப்புக்கள் இலவசம். இலங்கையின் எப்பாகத்தில் உள்ளவர்களும் இணைந்து கொள்ளலாம்.)
(C-2191)
077 925 0105

கடை / வீடு
வாடகைக்கு தேவை
பெண்களுக்கான அழகுக் கலை நிலையம் அமைப்பதற்கு ஏற்ற கடை அல்லது வீடு யாழ். நகர்ப் பகுதியில் வாடகைக்குத் தேவை.
(C-2175)
077 241 4466

காணி விற்பனைக்கு
பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உப்புறமாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 436 6704, 077 179 1963

காணி விற்பனை
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட ( யாழ். நகரில் இருந்து 1 1/2 Km தூரம் ) ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி, முதலாம் ஒழுங்கையில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம்.
077 288 0152
077 235 2656
074 075 4204

காணி விற்பனை
யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தில் முதலாம் ஒழுங்கையில்
30 பரப்புக் காணி விற்பனைக்கு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.)
1 பரப்பின் விலை 6 இலட்சம் மட்டும்
( யாழ். - மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 100 m தூரத்தில்)
076 221 2037
077 203 6402


## மரண அறிவித்தல்

### சிவசம்பு குமாரலிங்கம்

( உரிமையாளர் : சிவாஸ்ரோர்ஸ், மண்டைதீவு )

தோற்றம் : 22.10.1939

மறைவு : 22.05.2021



யாழ்ப்பாணம், மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு குமாரலிங்கம் கடந்த 22.05.2021 (சனிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரெத்தினம் - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் மஞ்சுளாதேவியின் அன்புக் கணவரும் உதயராணி, உதயமதி, தவசீலன், உதயரஞ்சினி, உதயமலர், ஜெயசீலன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் விஷயகுமாரன், யோகேஸ்வரன், ஈசானி, மோகனதாஸ், உருத்திரநாதன், றசிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற அமிர்தாம்பாளின் அன்புச் சகோதரனும் விஷயதீபன், பிரியலோஜினி, சசிறாஜ், நந்ததீபன், ஜனார்த்தனன், கஜலக்ஷி, கபில்தாஸ், தனுஜன், அனுஷிகா, ரக்ஷன், சுபசுதன், கபீசன், கோபிஷா, சாருசன், ஹர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் தஷ்வின், துளஷ்வின், சுவாதின், சர்வின், தியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

100/5, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்


அன்னா EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
லண்டன் 1000/=
070 3305500
077 888 9688
3-6 நாட்கள்
15,000/- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் · புத்தூர் · கோப்பாய் · புதுக்குடியிருப்பு · கிளிநொச்சி · பருத்தித்துறை
0768226240
DHL


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.5,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.